# பதினெட்டாம் அத்தியாயம்

ந்யாஸோபாஸநாதிரூப ஸர்வ சாஸ்த்ரோக்தோபப்ரும் ஹணங்களில் ‘சத்வார:ஏகதோ வேதா: பாரதம் சைவம் ஏகத:‘ என்னும்படி நிற்கிற மஹாபாரதம் ப்ரதானம்.

‘தர்மே சார்த்தே ச காமே மோக்ஷ ச பரதர்ஷப‘ இத்தியாயதிகளின்படியே சதுர்வித புருஷார்த்த ஸ்தாபகமான இதில் அத்யாத்ம பாகம் ப்ரதானம்.

அதிலும்,‘அத்ரோபநிஷதம் புண்யம் க்ருஷ்ணத்வைபாய நோப்ரவீத்‘ என்னும்படி ஸர்வோநிஷத் ஸாரமான கீதா சாஸ்த்ரம் ப்ரதானம்

அதுதன்னில் ‘ஸர்வகுஹ்யதமம்‘ என்று ப்ரசம்ஸித்து,அநந்தரம் சாஸ்த்ரார்த்த ஸங்க்ரஹம் பண்ணுகிற இரண்டு ச்லோகம்(18–65–66) ப்ரதானம்

அவை இரண்டிலும் த்வயர்த்தமான ப்ரபதனத்தினுடைய அதிகாரி நைரபேக்ஷ்ய,விஷய ஸவ்ரூப, பல விசேஷங்களை;சுருங்கத் தெளிவிக்கையாலே சரம ச்லோகம் ப்ரதானம்.

இதில் வாக்யங்கள் மூன்றில் உத்தர வாக்யங்கள் விதி சேஷங்களாய் அங்வயிக்கின்றனவாகையால் பூர்வ வாக்கியம் ப்ராதனம்

பல வாக்கியத்தில் சொன்ன ப்ரதிபந்தக நிவ்ருத்தியைப்பற்றி அர்த்த ஸ்வபாவத்தாலே ‘மாமேவைஷ்யஸி‘ (18–65) இத்தியாதிகளிற் சொன்ன ஸ்வத;ப்ராப்த ஸ்வாமிலாபம் ப்ரதானம்.

அர்ஜுனனுடைய சோக நிவர்த்தக வாக்யங்களில் த்விதீய அத்யாயோக்தமான அஸ்தாந ஸ்நேஹாதி நிபந்தந சோக நிவர்த்தனத்திலும்,ஷோடசாத்யாயத்தில் சொன்ன அநதிகாரித்வ சங்கா நிபந்தந சோக நிவர்த்தநத்திலும் காட்டில் இங்குச் சொல்லுகிற சீக்ரகாரி–ஸுகர –உபயோபதேசத்தாலே விளம்பித பல க்ருச்ராஸாத்ய–உபாயோபதேச ஜநித சோக நிவர்த்தநம் ப்ரதானம்‘

‘ப்ரான சதகம்‘ என்னும் ரஹஸ்யத்தில் ஸ்வாமி ஸ்ரீதேசிகன் அருளிச் செய்துள்ள வாக்கியங்கள் இவை.இவை மஹாபாரதத்தின் பெருமையையும்,அதனுள் கீதாத்ரியத்தின் பெருமையையும் அதனுள் பதினெட்டாவது அத்தியாயத்தின் முடிவில் உள்ள 65–66 இரண்டு ச்லோகங்களின் முக்கியத்துவத்தையும் இவ்விரண்டினுள்ளும் சரம் ச்லோகத்தின் பெருமையையும் இதிலும் பூர்வார்த்தத்தின் ப்ராதான்யத்தையும்,மேலும் சில விஷயங்களின் முக்கியத்துவத்தையும் விளக்குகின்றன.

ஸங்கதி–வேதம் கூறும் யஜ்ஞம் தவம் முதலியனதான் மோக்ஷம்–மற்ற நற்பயன் இவற்றைத் தரக் கூடியன.மற்றக் கர்மங்கள் இவற்றைக் கொடா.வேதம் கூறிய எல்லாக்
கர்மங்களுக்கும் பொதுவான ஆகாரம் ப்ரணவ ஸம்பந்தம்.மோக்ஷத்துக்கு ஸாதனமான கர்ம ‘தத்‘ என்ற சப்தத்துடன் தொடர்புபெற்றது.மற்ற பலனைத் தரும் கர்ம ‘ஸத்‘ என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறது பலனில் பற்றற்றுச் செய்யும் யாகதநாதிகள் மோக்ஷம் அளிப்பன.ஸத்துவ குணம் வளர்ந்தால்தான் மோக்ஷார்த்தமான செயலில் முனைவான். ஸாத்திவிக உணவை உட்கொண்டால்தான் ஸத்துவ குணம் வளரும் என்ற விஷயங்களை பதினாறு,பதினேழு அத்தியாயங்கள் விவரித்தன.

மோக்ஷ ஸாதனமாகக் கூறியிருக்கும் தியாகம்,ஸந்நியாஸம் இந்த இரண்டும் ஒன்று என்பதும் தியாகத்தின் ஸ்வரூபமும், ஜீவர்கள் செய்யும் எல்லாக் கர்மங்களையும் ஸர்வேச்வரனான பகவானே செய்விக்கிறான் என்ற அநுசந்தானம் வேண்டும் என்பதும்,ஸத்துவம் முதலிய குணங்களின் காரியங்கள் எவை என்பதும் பகவத் ப்ரீதியையே உத்தேசித்துச் செய்யும் வர்ணதர்மங்கள் பகவானை அடைப்பிக்கும் பிரகாரமும் கீதா சாஸ்திரத்தின் ஸாரம் பக்தியோகம் என்பதும் இந்தப் பதினெட்டாம் அத்தியாயம் விவரிக்கிறது.

பதினெட்டாம் அத்தியாயம்

அர்ஜுனன்–கண்ணா!உலகில் தியாகம்,ஸந்நியாசம் என்ற இரண்டு சப்தங்கள் வழங்கக் காண்கிறோம். இரண்டும் ஒரே பொருளா?வேறாக இருந்தால் விவரிக்க வேண்டும்

கண்ணன்–தியாகம்,ஸந்நியாஸம் ஆகிய இரண்டும் ஒன்றுதான்.சில மேதாவிகள் பலனை விரும்பிச் செய்யும் காம்ய கார்யங்களை அடியோடு விடுவதுதான் தியாகம் என்ற ஸந்நியாஸம் ஆகும் என்று சொல்லுகின்றனர்.திறமை மிக்க வேறு ஆராய்ச்சியாளர்கள் ‘நித்யம்–நைமித்திகம்– காம்யம்’ என்ற கர்மாக்களின் பலனை மட்டும் விடுவதுதான் தியாகமாகிற ஸந்நியாஸம் என்று சொல்கின்றனர்.

வேதத்தை அங்கீகரிக்காத ஸாங்க்யர்களும் வேதத்தை அங்கீகரித்தும் ஸாங்க்ய மதத்தைப் பின்பற்றக்கூடியவர்களுமான சிலரும் ‘மோக்ஷத்தை விரும்புகிறவன் ஹிம்ஸை முதலிய தோஷம் நிரம்பியுள்ள யாகாதி கர்மாக்களைச் செய்யக் கூடாது என்று கூறுகின்றனர். வேறு சில பண்டிதர்கள் ‘சாஸ்திரம் கூறிய யாகாதிகள் விடத் தக்கவையல்ல.அவை அவசியம் செய்யத்தக்கனவே என்று சொல்கின்றனர்.

தியாகம் மூன்று உட்பிரிவுகளைக் கொண்டது என்று ஏற்கனவே கூறியுள்ளேன். சாஸ்திரம் கூறியுள்ள யஜ்ஞம்,தானம்,தவம் முதலியன ஒருபோதும் விடத்தக்கதல்ல. மனனம் அதாவது உபாஸனம் செய்பவர்களின் உபாஸனத்துக்குத் தடங்கலான பாவங்களை நீக்கி அதை வளர்க்கக் கூடியவை யஜ்ஞாதி கர்மங்கள்.

உபாஸனம் போலவே யாகாதி கர்மாக்களும் பகவத் ப்ரீதி ஜனகங்கள் என்ற எண்ணத்துடன் ‘நான் செய்கிறேன், என் ப்ரீதிக்காகச் செய்கிறேன்,கர்ம எனக்கு சேஷம்
என்ற எண்ணங்களைவிட்டு அவசியம் செய்யத்தக்கவை என்பது உறுதியானதும் உத்தமம் ஆனதுமான என்னுடைய ஸித்தாந்தம் ஆகும்.

தாமஸ த்யாகம்–காம்ய கர்மம் போலன்றி அவசியம் செய்யத்தக்கவையான நித்ய நைமித்திகங்களை ஒருபோதும் கைவிடக் கூடாது.விபரீத ஜ்ஞானத்தால் அவற்றைவிட்டால் அந்தத் தியாகம் தாமஸமாகும்.

ராஜஸ த்யாகம்–கர்மமானது பரம்பரயா மோக்ஷஸாதனம் ஆகும் என்பதை அறிந்தும் சிலர் அதைச் செய்வதில்லை.அதற்கு காரணம் பணச் செலவு,உடம்புக்கு ஆயாஸம் ஸம்பவிக்கும், இவற்றால் மனம் சோர்ந்து போகும் என்ற பயம்தான். இவற்றுக்குக் காரணம் ரஜோகுணம்.இந்தக் குணங்களால் கர்மாவை விடுவதனால் ராஜஸ த்யாகமாகும். இதைச் செய்பவர்கள் ஸாத்துவிக த்யாகத்தினால் ஸம்பவிக்கும் பலனைப் பெறமட்டார்கள்.

ஸாத்துவிக த்யாகம்–தன்னுடைய வர்ணாச்ரமங்களுக்கு ஏற்பட்ட நித்ய நைமித்தக கர்மாக்களைச் செய்யும்பொழுது‘நான் இவற்றைச் செய்கிறேன்,இவை எனக்கு சேஷம்,இவற்றால் உண்டாகும் பலன் என்னைச் சேரும்’ என்ற பற்றுதல் இன்றிச் செய்ய வேண்டும்.கர்த்ருத்வ த்யாகம்,மமதா த்யாகம்,பல த்யாகம் ஆகிய இம்மூன்று த்யாகங்களே ஸாத்துவிக த்யாகமாகும். இவற்றுடன் செய்யப்படும் கர்மாவே ஸாத்துவிகத்துடன் செய்யபடும் கர்மாவாகும்.

ஸத்துவ குணம் வளரப் பெற்றுத் தியாகத்தைச் செய்பவனுக்கு தெளிவான ஜ்ஞானம் பிறக்கிறது. அவனுடைய ஸந்தேஹங்கள் அறவே ஒழிந்து விடுகின்றன.அவன் நன்மையைத் தரும் கர்மங்களில் ஈடுபடுவதில்லை.தீமையை விளைவிக்கும் பாப கர்மங்களை வெறுப்பதுமில்லை.

உடலுடன் கூடிய எவரும் கர்மத்தை நித்ய கர்மாக்களை விடமுடியாது. கர்மாவைச் செய்துகொண்டு அதன் பலனை விரும்பாதவனே தியாகி எனப் பெறுகிறான்.

ஒருவன் பூமியில் விதை விதைக்கிறான்.ஆனால் அதன் பலனை விரும்பவில்லை.இந்தக் காரணத்தால் விதைப் பலன் தராமல் இருந்துவிடுமா?பலனை விரும்பி விதைத்தாலும் விரும்பாமல் விதைத்தாலும் கட்டாயம் பலன் உண்டாவதைக் காண்கிறோம்.அவ்வாறே

## பதினெட்டாம் அத்தியாயம்

கர்மாவும் பலனை விரும்பி அநுஷ்டித்தாலும், விரும்பாமல் அநுஷ்டித்தாலும் கர்மபலனைத் தரத்தானே செய்யும்? இப்படி இருக்க பலனில் விருப்பமில்லாமல் செய்யும் கர்மாக்கள் எப்படி பலனைத் தராது என்பது எப்படி பொருந்தும் என்று நினைக்கலாம்?விதை விஷயம் வேறு. கர்ம விஷயம் வேறு. விதை விதைத்தால் பலன் கிடைக்கும் என்பது உலக நியதி. கர்மாக்களைச்
செய்தால் ஸ்வர்க்கம் முதலிய பலன் கிடைக்கும் என்பது வேதம் கொண்டே அறிய வேண்டியது
ஆகும். அதற்காக வேதத்தை அறியும்போது இந்தப் பலனில் விருப்பம் உள்ளவன் இதற்காக ஸங்கல்பித்துக்கொண்டு இந்தக் கர்மாவைச் செய்யக் கடவன் என்று ஸங்கல்பத்தை அநுஸரித்து பலஸாதனமாகக் கர்மாவை விதிக்கிறது வேதம். ஆகவே விதையின் நிலையைக் கொண்டு குழம்ப வேண்டாம்.

இஷ்டம், அநிஷ்டம், இஷ்டமாயும் அநிஷ்டமாயும் இருப்பது என்று கர்மாக்களை மூன்று வகையாகப் பிரிந்துள்ளன. ஸாத்துவிக த்யாகத்தைச் செய்யாமல் கர்மாக்களை செய்பவன் அதன் பலனை பெறுவான். ஸாத்துவிக த்யாகத்துடன் கர்மாக்களை செய்யும் ஸந்ந்யாஸிகளுக்கு தாங்கள் அநுஷ்டிக்கும் கர்மாக்களால் எந்தப் பலனும் இராது.

எதற்கும் ஐந்து காரணங்கள்–ஆத்மதத்துவ விஷயமான வைதிக ஸித்தாந்தம் எந்தக் காரியமாக இருந்தாலும் அதன் உற்பத்திக்கு ஐந்து காரணங்களைக் கூறியிருக்கிறது.

சாஸ்திரம் அநுமதித்த கர்மாவாக இருந்தாலும், சாஸ்திரம் தடுத்த கர்மாவாக இருந்தாலும் இவற்றை மனிதன் உடல்–வாக்கு மனம் இவற்றால் செய்யத் துவங்கும்பொழுது , உடல், ஜீவன் வெவ்வேறு வகையான இந்திரியங்கள், பல உட்பிரிவுகளையுடைய பிராணவாயுவின் பல பிரகாரமான ஸஞ்சாரம், ஐந்தாவது முக்கியமான பரமாத்மா என்ற ஐந்தும் காரணங்கள். ஐந்து பேர் சேர்ந்து செய்யும் காரியத்தில் தன்னை மட்டும் கர்த்தாவாக நினைப்பவன் தெளிவான புத்தியற்றவன்.

ஈச்வரனே முக்கிய கர்த்தா என்பதை உணர்ந்து 'நான் செய்யவில்லை, எனக்காகச் செய்யவில்லை, செய்யப்படும் கர்மம் என்னைச் சேர்ந்ததன்று' என்று தெளிவுள்ளவன் யுத்தத்தில் பீஷ்மாதிகளை மாத்திரம் அன்று எல்லா ஜீவாத்மாக்களையும் கொன்றவன் இவன் கொன்றவன் ஆகான். அதன் பலனையும் அநுபவிக்கமாட்டான்.

கர்மாவிலும்–இதன் தொடர்புள்ள சிலவற்றிலும் ஸாத்துவிகம்–ராஜஸம்–தாமஸம் என்ற மூன்று வகைப் பிரிவுகள் உண்டு. கர்மாவை விதிக்கும் சாஸ்திரம், செய்யவேண்டிய கர்மாவைப் பற்றின அறிவு, செய்ய வேண்டிய கர்மம், செய்ய வேண்டிய கர்மத்தின் தெளிவாக அறிந்தவன் என்று மூவகைப் பிரிவுகளை உட்கொண்டதாகும். அறியப்படும் கர்மத்திலும் கர்மத்திற்கு வேண்டிய திரவியம் முதலியன, யாகம் முதலிய கர்மா, அவற்றைச் செய்பவன் என்ற மூன்று பிரிவுகள் உள்ளன.

அறிவு–கர்மா–செய்பவன் என்பன ஸத்துவம், ரஜச், தமஸ் என்று குணங்களின் மாற்றத்திற்கேற்ப மூன்று வகை. ஸத்துவம் முதலிய குணங்களின் காரியத்தைக் குறிப்பிடும்போது இந்த மூன்று பிரிவுகள் கூறப் பெற்றுள்ளன.

மூவகை அறிவுகள்
-------------
கர்மாவைச் செய்பவர்களில் சரீரம், நிறம் முதலியவற்றில் வேறுபாடு இருந்தாலும் ஆத்மாவில் வித்யாஸமில்லை. சரீரம் முதலியவற்றில் ஏற்படும் விகராதிகளும் அதாவது அழிவு முதலியனவும் ஆத்மாவுக்குக் கிடையாது என்ற உணர்வு ஸாத்வீகம்

எல்லா பிராணிகளிடத்துமுள்ள ஆத்மா ஒரே மாதிரியானவை என்று உணரக்கூடிய யோக்யதை அற்றவர்கள், அவரவர் வேண்டும் பயனுக்குத் தக்கவாறு வெவ்வேறு இனம் உள்ளவையாகவும் வெவ்வேறு குணம் உள்ளவையாகவும், இயற்கையாகவே வெவ்வேறு பலனில் நோக்குள்ளதாகவும் ஆத்மாக்களைக் கருதுகின்றனர். இந்த அறிவு ராஜஸம் ஆகும்

பதினெட்டாம் அத்தியாயம்

ப்ரேதம், பூதம் முதலியவற்றுக்கு சந்தோஷத்தை உண்டு பண்ணுவதும், அத்யல்பமான பலனைத் தரக்கூடியதுமான கர்மாவை, மிகப் பெரிய பலனைத் தரக்கூடியதாகச் சிலர் கருதுகின்றனர். இப்படி அவர்கள் கருதுவதற்குச் சிறிதளவும் நியாயமில்லை. இவர்கள் ஆத்மாவில் பல விரிவுகளைப் பார்க்கின்றனர். இவர்களுடைய இந்த அறிவு தாமஸ அறிவு ஆகும்

கர்மாக்களின் மூன்று பிரிவுகள்
------------------------------

தன் வர்ணத்திற்கும் ஆச்ரமத்திற்கும் ஏற்பட்டதும்'நான் செய்கிறேன்' என்பது போன்ற பற்றுக்கள் அற்றதும் ,புகழில் ஆசை, பழியில் வெறுப்பு இவற்றால் செய்யப்படாததும். பலனைக் கருதிச் செய்ய பெருததுமான–கர்மம் ஸாத்துவிகம்

பலனில் பற்றுதலுடனும், மிகக் கஷ்டமான இந்தக் கர்மாவை நானே செய்கிறேன் என்ற அஹங்காரத்துடனும் செய்யப்படும் கர்மம் ராஜஸம் ஆகும்

பின்னால் வரும் கேட்டையும், கர்மாவைச் செய்யும்பொழுது ஏற்படும் பணச் செலவையும், பல
ஜீவஹிம்சையையும் தனது சக்தியையும் கவனிக்காமல், ஸர்வேச்வரன் கர்த்தா என்பதையும் அறியாமல் செய்யப்படும் கர்மம் தாமஸாமாகும்

கர்த்தாவில் மூவகைப் பிரிவுகள்

பலனைக் கருதாமலும் கர்மா என்னைச் சார்ந்தது என்ற எண்ணம் இன்றியும், நான் செய்கிறேன் என்ற அபிமானம் இல்லாமலும் கர்ம பூர்த்தி பெறும்வரை ஸம்பவிக்கும் ச்ரமங்களைப் பொறுத்துக்கொண்டும் உத்ஸாகத்துடன் முனைந்தும், இம்மையில் ராஜ்யம் முதலியன கிடைத்தாலும் கிடைக்காமற் போனாலும் ஸந்தோஷமோ வருத்தமோ இல்லாமலும் கர்மாவைச் செய்பவன் கர்த்தா ஆவான்.

புகழை விரும்புகிறவனும் ஸ்வர்க்கம் முதலிய பலனில் ஆசைப்படுகிறவனும், கர்மாவை நிறைவேற்றுவதற்குத் தேவையான பணத்தைச் செலவழிப்பதில் விருப்பம் அற்றவனும், பிறரை ஹிம்ஸித்துக் காரியத்தை ஸாதிப்பவனும், கர்மாவைச் செய்வதற்குத் தேவையான சக்தி இல்லாதவனும், ஸந்தோஷம் வருத்தம், இவற்றுடன் கூடினவனுமான கர்த்தா ராஜஸன் ஆவான்.

சாஸ்திரம் கூறிய கர்மாவைச் செய்வதற்கான தகுதி இல்லாதவனும், அதற்கான அறிவு இல்லாதவனும் எந்த வேலையையும் தொடங்குவதில் நோக்கமே இல்லாதவனும், பிறரை அழிப்பது வரையிலான வியாபரத்தில் ருசியுள்ளவனும், பிறரை வஞ்சிப்பதில் நாட்டமுள்ளவனும், தொடங்கின கர்மாவிலும்
சுறுசுறுப்பிலாதவனும், மிக்க சோர்வு உடையவனும், பிறருக்கு நெடுநாள் வரை இருக்கும் கஷ்டத்தை விளைவிக்க வேண்டும் என்று திட்டம் வகுப்பினுமான கர்த்தா தாமஸன் ஆவான்.

புத்தியில் மூவகைப் பிரிவுகள்
---------------------------

கர்மாவைச் செய்பவனுக்கு அநுஷ்டான தசையில் ஆத்மாவைப்பற்றிய அறிவு ஜ்ஞானம் ஆகும். சாஸ்திர விசாரத்தின் முலம் உண்டாகும் நிர்ணயம் இங்கே புத்தி என்று கூறப்படுகிறது. இதுவே மூவகைப் பிரிவுகள் உள்ளன.

அர்ஜுன! ஸாத்துவிகம், ராஜஸம், தாமஸம் என்று மூன்று வகையாகப் பிரிந்திருக்கும் புத்தி, தைரியம், இவற்றினுடைய உட்பிரிவை மிகத்தெளிவாகக் கூறுகிறேன். விவேக பூர்வகமான நிச்சயமே இங்கு புத்தி எனப்படுகிறது.

பதினெட்டாம் அத்தியாயம்

மோக்ஷம் தவிர மற்றப் பலனைக் கொடுக்கும் தர்மத்தையும், இடம், கால்ம் முதலியவற்றுக்கு ஏற்பச் செய்யத்தக்கதையும் செய்யத்தகாததையும் உள்ளவிதமின்றி வேறுவிதமாக க்ரஹிக்கும் புத்தி ஸாத்துவிக புத்தியாகும்

கீழே கூறிய இரண்டு விதமான தர்மங்களையும் அவற்றுக்கு விபரீதமான அதர்மங்களையும் இவற்றுக்கு அநுகுணமான இடம்–காலம்–சக்தி இவற்றுக்கு ஏர்ப்பச் செய்யத்தக்கதையும் செய்யத்தகாததையும் உள்ள விதமின்றி வேறுவிதமாக கிரஹிக்கும் புத்தி ராஜஸம் ஆகும்

தமோகுணத்திற்குத் தாத்காலிகமாக ஏற்பட்டிருக்கும்மிக அதிகமான வளர்ச்சியினால் புத்தி தாமஸம் ஆகிறது. அது தர்மத்தை அதர்மம் என்று க்ரஹிக்கும், அதர்மத்தை தர்மம் என்று பற்றும், உள்ளதை இல்லை என்றும், இல்லாததை உள்ளது இல்லை என்றும், இல்லாததை உள்ளது என்றும், நல்லதை தீயது என்றும், தீயதை நல்லது என்றும் க்ரஹிக்கும். இவ்விதமே எல்லா விஷயங்களையும் விபரீதமாக க்ரஹிக்கும்.

த்ருதியின்(மன உறுதியின் தைர்யத்தின்)மூவகைப் பிரிவுகள்

மோக்ஷத்துக்காகப் பகவானை தியானம் செய்ய உதவியான மனம், பிராணன், இந்திரியங்கள், இவற்றின் செயலைவிடாமல் தொடர்வதற்கான த்ருதி ஸாத்துவிகம் ஆகும்

பலனில் விருப்பத்தினால் அதிகமான பற்றுதலுடன் தர்மம், அர்த்தம், காமம் இவற்றுக்கு ஸாதனமான மனம், பிராணன், இந்திரியங்கள் இவற்றின செயலை விடாமல் தொடர்வதற்கு ஸாதனமான த்ருதி ராஜஸம் ஆகும்

உறக்கம், விஷயநுபவத்தினால் ஏற்படும் திமிர் இவற்றுக்கானவையும் சோகம், வருத்தம், அச்சம் இவற்றைத் தரும் விஷயங்களைப் பற்றினவையுமான மனம், பிராணன், இந்திரியம் இவற்றின் செயலை விடாமல் தொடர்வதற்கான த்ருதி தாமஸம் ஆகும்

ஸுகத்தின் மூவகைப் பிரிவுகள்
--------------------------

பலனாகப் பெறப்படும் சுகமும் ஸாத்துவிகம், ராஜஸம், தாமஸம் என்று மூவகைப்படும். வெகுகாலப் பயிற்சியால் எந்த சுகத்தில் பிரீதி எற்படுகிறதோ, எந்த ஸுகம் கிடைத்ததும் ஸாம்ஸாரிக துக்கங்கள் அனைத்தும் அடியோடு நாசம் அடையுமோ, எந்த சுகம் யோகத்தின் தொடக்கத்தில் விஷம்போல் கசப்பாயும், அதுவே மேன்மேலும் வளரும்போது அமுதம்போல் இனிதுமாகுமோ ஆத்மவிஷயமான அறிவின் தெளிவினால் ஆன அந்த ஸுகம் ஸாத்துவிகம்
ஆகும். விஷயங்களுக்கும் இந்திரியங்களுக்கும் ஏற்பட்ட தொடர்ப்பினால் உண்டாகும் ஸுகம்
அநுபவ வேளையில் அமுதம் போல் இனித்தாலும் முடிவில் விஷம்போல், ஸங்கடத்தையே விளைவிக்கும். இதுதான் ராஜஸ ஸுகம் ஆகும்.

அநுபவ காலத்திலும் பிற்காலத்திலும் நமக்கு அஜ்ஞானத்தையே விளைவிக்ககூடிய ஸுகம் தாமஸம் ஆகும். உறக்கம், ஸோம்பல், அநவதானம் இவற்றால் உண்டாகும் இந்த ஸுகம். பூமியில் உள்ள மனிதர்களிலோ–மேல் உலகில் உள்ள தேவர்களிலோ கீழே கூறிய மூன்று குணமற்ற ஜந்து ஒன்றுகூடக் கிடையாது. எல்லா ஜீவர்களும் மூன்று குணங்களுக்கு வசமானவர்களே என்று கருத்து.

அர்ஜுன! பிராம்மணர், க்ஷத்திரியர், வைச்யர், வேளாளர் இவர்களில் யார் யாருக்கு என்ன குணம் என்ன செயல், ஜீவனோபாயம் என்ன என்பவற்றைச் சாஸ்திரம் மிகத் தெளிவாக கூறியுள்ளன.

நால்வகைக் கர்மங்கள்
-------------------

## பதினெட்டாம் அத்தியாயம்

வெளி இந்திரியங்களை அடக்குவது,மனத்தை அடக்குவது,சாஸ்திரம் இசைந்த வகைகளில் உடலை உலர்த்துவது,சுத்தி,பொருமை,மனோ–வாக்–காயங்கள் ஒத்திருக்கை பரதத்துவத்தையும் அவர் தத்துவத்தையும் உள்ளபடி அறிதல் பரதத்துவத்துக்கு இருக்கும் அஸாதாரண விசேஷங்களை அறிதல்,மறை உரைக்கும் பொருள் எல்லாம் மெய் என்று உணர்த்தல்–இவை யாவும் ப்ராம்மண ஜாதிக்குப் பூர்வகர்மானுகுணமாக இயற்கையாக ஏற்படும் செயல்களாகும்

போரில் பயமின்றிப் புகுதல்–சத்ருக்களை பரிபவத்தை அடையாமை,இடையூறு நேர்ந்தாலும் தொடங்கின நற்கர்மாவை நிறைவேற்றும் திறன்,எல்லாச் செயல்களையும் சுறுசுறுப்பாகச் சீக்கிரம் நன்றாக நிறைவேற்றும் ஸாமர்த்தியம்,போரில் அஞ்சி ஓடாமை,கொடை,ஆள்கை இவை க்ஷத்திரிய ஜாதிக்கு பூர்வக்ருத கர்மானு குணமாக இயற்கையாக ஏற்படும் செயல்

பயிர்த்தொழில்,மாடுகளை காத்தல்,வர்த்தகம் இவை வைச்யர்களுக்கு ஸஹஜமாக ஸம்பவிக்கும் செயல்கள்.

மூவர்ணத்தவர்க்கும் பணிவிடையைச் செய்வது வேளாளருக்கு முன் செய்த வினைக்கு அனுகுணமாக ஸம்பவிக்கும் செயல்.

தன் வர்ணத்துக்கான செயலில் ஈடுபட்ட மனிதன் பரம பலனைப் பெறுகிறான்.தனக்குரிய செயலில் ஈடுபட்டவன் பயனைப் பெரும் வழியைச் சொல்லுகிறேன் கேள்.

பிராணிகளுக்கு உத்பத்தி–ஸ்திதி முதலிய வியாபாரங்கள் எல்லாம் எவன் ஆதினமோ! அதெல்லாம் எவனால் சூழப்பெற்றுள்ளதோ!அந்தப் பகவானை மனிதன் தனக்கு உரிய செயலால் நன்றாக ஆராதித்துப் பலனைப் பெறுகிறான்.

### தன் கருமமே சிறந்தது

---

கர்மயோகிக்குத் தன் தர்மமான கர்மயோகம் சரிவரச் செய்யப் பெறாமல் சிறிது குறையுள்ளதாக இருப்பினும்,நன்றாகச் செய்யப் பெற்றதுபோல் தோன்றும். ஜ்ஞான யோகி,பக்தியோகி இவர்களுடைய தர்மங்களான ஜ்ஞான பக்திகளைவிடச் சிறந்ததாகும்.தனக்கு உரியதாகச் சாஸ்திரம் கூறிய செயலைச் செய்பவன் பாவமான ஸம்ஸாரத்தைப் பெறான்.

இயற்கையானதாகையால் எளிதில் செய்யத்தக்கதான கர்மயோகத்தில் நீ நினைக்கிறபடி சில சிரமங்கள் இருப்பினும் அது விடத்தக்கதன்று.எதில் நீ எளிதில் முனைந்தாலும் நெருப்பு புகையால் சூழப்பெறுவதுபோல் அதிலும் எதாவது தோஷம் சூழ்ந்துதான் இருக்கும்.

கர்மாவில் புகுந்தால் கர்மபலன் வந்துதானே தீரும் என்று வருந்த வேண்டாம்.பலன் முதலியவற்றில் பற்றில்லாதவனாய் மனத்தை வென்று 'நான் செய்கிறேன்' என்று கனவிலும் நினையாமல் கர்மாவைச் செய்பவன் மிகச் சிறந்ததாயும் ஜ்ஞானயோகத்துக்குப் பிறகு ஸம்பவிக்கக்கூடியதுமான யோகதசையைப் பெறுகிறான்.

யோகம் செய்யயோக்யதை பெற்றவன் உண்டான் அறிவுக்கு முக்கிய லக்ஷ்யமான ஆத்மாவை அடையும் பிரகாரத்தையும் சுருக்கமாகக் கூறுகிறேன்.

ஆத்மதத்துவ விஷயத்தில் தெளிவான புத்தி பெற்றிருக்க வேண்டும்.ஆத்மா தவிர மற்ற விஷயங்களில் செல்லாதபடி உறுதியுடன் மனத்தை விலக்கி ஆத்மாவையே நினைக்கக் கூடியதாகச் செய்ய வேண்டும்.சப்தம் முதலிய விஷயங்களை அப்புறப்படுத்த வேண்டும். சப்தாதி விஷய நிமித்தமான விருப்பு–வெறுப்புகள் அற்றிருக்க வேண்டும்

## பதினெட்டாம் அத்தியாயம்

ஆத்மாவை தியானம் செய்ய இடைஞ்சல்கள் இல்லத இடத்தில் வஸிக்க வேண்டும். மிதமான உணவைச் சாப்பிட வேண்டும். மனம் வாக்கு உடல் ஆகிய மூன்றையும் தியானத்துக்கு உதவி புரியக்கூடியவையாக ஆக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் தியானம் செய்வதில் இழிந்திருக்க வேண்டும். ஆத்மா தவிர மற்ற விஷயங்களில் இருக்கும்வைராக்கியத்தை வளர்க்க வேண்டும்.

தேகம் முதலியவற்றில் ஆத்மா என்ற அபிமானத்தையும் அதை வளர்க்கும் துர்வஸனு பலத்தையும் அதன் மூலமாக வரும் கொழுப்பு, ஆசை, கோபம் இவற்றையும் இவற்றுக்குக்
காரணமான வஸ்துக்களையும் விட வேண்டும். தனது என்ற புத்தியையும் விட வேண்டும்.

இவ்விதம் விடவேண்டியதை விட்டு ஆத்மாநுபவத்திலேயே பரமசுகத்தைக் காண்பவன் ஆத்மாவை உள்ளபடி அநுபவிக்கத் தகுதி பெறுகிறுன்.

கர்மயோகாதிகள் தியானத்தின் மூலம் தன்னைக் காண்பவன் பகவானைத் தியானம் செய்வதற்கு அதாவது பரபக்திக்குத் தகுதி பெறுகிறுன்.

ஜீவன் இயற்கையிலேயே அறிவாக அதாவது ஜ்ஞானஸ்வரூபனுக இருக்கிறுன். அவன் எனக்கு எப்பொழுதுமே சேஷன். இப்படிப்பட்ட தன் ஸ்வரூபத்தை உள்ளபடி அநுபவிப்பவன் தெளிவான் மனம் பெறுகிறுன். வேறொன்றின் இழப்பை நினைத்து அவன் வருத்தப்படமாட்டான். மற்றப் பொருளை விரும்பவும் மாட்டான். என்னை தவிர மற்ற எல்லாப் பொருள்களையும் விடத்தக்கவனுக நினைத்து த்ருணமாகக் கருதுவான். இந்த நிலையை அடைந்தவன் என் விஷயமான பரபக்தியைப் பெறுகிறுன்
என்றுன் பகவான்.

மேலும் கண்ணன் தன் உபதேசத்தைத் தொடருகிறுன். நான் உண்மையில் எவனுகவும், எவ்வளவு குணவைபவங்களை உடையவனுகவும் இருக்கிறேனுே அப்படிப்பட்ட என்னைப் பரபக்தியால் காண்கிறுன். உள்ளபடி என்னைக் கண்டு அதன் பிறகு கீழே கூறிய பரபக்தியின் முதிர்ச்சியால் என்னிடம் புகுகிறுன், என்னை அடைகிறுன்.

நித்ய-நைமித்திக கர்மங்களைப் போல் காம்ய கர்மங்களையும் செய்யலாம். இவற்றைச் செய்யும்போதும் முன் கூறியபடி மூன்றுவித த்யாகத்துடன் செய்யவேண்டும். இவ்விதம் செய்பவன் என் அநுகிரகத்தால் அழிவற்றவனும் பரிபூர்ணனுமான என்னைப் பெறுகிறுன்.

எனக்கு நீ சேஷபூதனுகவும், பரதந்த்ரனுகவும் இருக்கிறுய். இதை நீ ஒருபோதும் மறக்கக் கூடாது. காம்ய கர்மா உட்பட எல்லாக் கர்மங்களையும் என்னிடம் அர்ப்பணம் செய்ய வேண்டும். என்னையே பரம் ப்ராப்யமாகக் கருத வேண்டும். இந்த எண்ணங்களைக் கடைசி வரை நீ விடாமல் மனத்தில் பதியவைத்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் இருந்துகொண்டு நீ எப்பொழுதும் என்னையே நினைப்பாயாக.

இவ்வாறு நடந்துகொண்டால் என் அநுகிரகத்தினுல் எல்லாக் கஷ்டங்களையும் கடந்துவிடுவாய். எதைச் செய்தால் நம்ன்மை விளையும் ,எதைச் செய்தால் தீமை விளையும் என்ற விவேகம் எனக்கு இல்லையா?நீ சொல்லித்தானு நான் நடந்துகொள்ள வேண்டும் என்ற அகங்காரத்தினுல் நான் கூறியபடி நடக்காமற்போனுல் நீ நாசம் அடைவாய்.

அர்ஜுனா!பிறரை மதிக்காமல் எனக்கே நன்மை தீமைகள் தெரியும்;நான் ஸ்வதந்த்ரன், என்ற அஹங்காரத்தைப் பற்றிக்கொண்டு, யுத்தம் செய்யப் போவதில்லை என்று தீர்மானிப்பாயானுல் உன்னுடைய அந்தத் தீர்மானம் பொய்யாகும். அதாவது நிலைத்து நிற்காது. உன் ஸ்வபாவம் உன்னை யுத்தம் செய்யத் தூண்டும். உன்னுல் யுத்தத்தை தவிர்க்க முடியாது.

நீ அதே யுத்தத்தை செய்யப் போகிருய். உனக்கு இயற்கையாகவே அமைந்திருக்கும் சௌர்யம், தேஜஸ் முதலியவற்ருல் தூண்டப்பட்டு உன் வசமிழந்து யுத்தத்தைச் செய்யப் போகிருய்.

அர்ஜுனன்–யுத்தத்தை செய்ய விரும்பாமல் இருக்கும் என்னைக் கலைத்து அதே யுத்தத்தில் ஈடுபடும்படிச் செய்ய யாராலும் முடியாது. நான் கொண்ட உறுதி நிலையானதே என்ருன்.

கண்ணன்–அர்ஜுன! நீ நினைப்பது தவறு. உலகில் எவரும் தாங்களே செயற்படுவதில்லை என்பதை நீ அறிந்துகொள்ள வேண்டும். ஈச்வரன் தான் எல்லாரையும் அவரவர் கார்யங்களிலெ நியமிக்கிருன். ஈடுபடச் செய்கிருன். அவரவர்களின் கர்மம் காரணமாக ஈச்வரன் ப்ரக்ருதியைக் கொண்டு ஸத்துவம், ரஜஸ்,
தமஸ் என்ற மூன்று வகைகளால் எல்லாக் காரியங்களிலும் ஈடுபடச் செய்கிருன். இதற்க்காகத்தான் ஹ்ருதயத்தில் நிலைத்திருக்கிருன். யந்திரங்களில் ரங்கராட்டினம் போன்று காணப்படும் யந்திரம் முதலானவற்றில் குழந்தைகளை ஏற்றி வைத்து யந்திரக்காரன் சுழற்றுவதுபோல் ஈச்வரன் இந்தச் சரீரம் ஆகிய யந்திரத்தில் ஜீவர்களை ஏற்றி வைத்து மேலும் கீழுமாகச் சுற்றுகிருன். அப்படிச் சுழற்றும்போது நான் சுழலாமல் இருப்பேன் என்று ஒருவராலும் நினைக்கவும் முடியாது. நினைத்தபடி நிற்கவும் முடியாது. ஆகவே உன் உறுதி மாறிவிடும்
என்ருன் கண்ணன்.

இந்த மாயையின் சுழலிலிருந்து விடுபட வேண்டுமானுல் ஸர்வாந்தர்யாமியான வாஸுதேவனையே சரணமாகப் பற்று அவனது அநுக்கிரகத்தினுல் கர்ம பந்தத்திலிருந்து விடுபட்டுப் பரமபதத்தை அடைவாய்.

மோக்ஷத்தை விரும்புகிறவர்கள் அவசியம் அறிய வேண்டிய கர்மயோகம், ஜ்ஞானயோகம், பக்தியோகம் பற்றி கூறியுள்ளேன். இவற்றை நன்ருக பராமர்ச்சித்து விருப்பபடி செய் என்ருன் கண்ணன்.

அர்ஜுனன்–கண்ணு! உதாசீனர்களாக இருக்கும் அந்நியரைப் போலவே என்னையும் நீ நினைப்பதாக தோன்றுகிறது. மோக்ஷத்திற்கு ஸாதனம் எது என்பதை தெளிவாகக் கூறு. அப்படி நிஷ்கர் ஷித்து குறிப்பிட்டு கூருதது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது என்ருன்.

கண்ணன்–நீ அவ்வாறு நினைக்க வேண்டாம். கீழே கூறியவற்றில் மிக மிக ரஹஸ்யமானது பக்தியோகமே. நிலைகுலையாத பக்தியுடன் என்னை நினை. அதே பக்தியுடன் உன் கர்மாக்களைச் செய். அந்த பக்தியுடன் என்னை வணங்கி என்னை அடைவாய். உன்னிடம் நான் ப்ரதிஜ்ஞை செய்கிறேன்.

வேறு பலனைக் கருதாமல் செய்யப்படுகிற நிவ்ருத்தி தர்மங்கள் என்று பெயர் பெற்ற கர்மயோக, ஜ்ஞானயோக, பக்தியோகங்களை மிகவும் பிரீதியுடன் செய்யும்போது ஸாத்துவிக த்யாகத்துடன் செய்து வா. செய்யப்படும் கர்மங்களுக்கு நான் கர்த்தா, அவை எனக்கு சேஷங்கள், அவற்ருல் வரும் பலன் எனக்கே என்ற எண்ணத்தைவிடுவதுதான். இதுதான் 'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய'
என்ற சொல்லால் நான் உனக்கு குறிப்பிட்டு சொல்கிறேன். இந்தச் சப்தத்தைக் கொண்டு
ஸர்வ கர்மாக்களையும் செய்யாமலேவிட்டுவிட வேண்டும் என்று நான் சிலர் சொல்லுகின்றனர்.
அதில் எனக்கு உடன்பாடன்று. இப்படி ஸாத்துவிக தியாகத்தைச் செய்து ப்ரதான கர்த்தாவாகவும் ஆராத்யனுகவும், ப்ராப்யனுகவும் இருக்கும் என்னையே உபாயமாக நினைப்பாய். நீ அநுஷ்டிக்கும் கர்மயோக, ஜ்ஞானயோக, பக்தியோகாதிகள் உபாயங்கள் ஆகா. நானே ப்ராதான உபாயமாவேன். இப்படிச் செய்தால் என்னைப் பெறுவதற்கு தடையாயுள்ள பாவங்கள் யாவற்றிலிருந்தும் உன்னை விடுவிக்கிறேன்
என்ருன்.

## பதினெட்டாம் அத்தியாயம்

அர்ஜுனன்—கண்ணா!இவ்வளவு கூறியபோதும் என் மனத்தில் உள்ள வருத்தம் விலகவில்லை. உன்னை அடைய பக்தியோகம் செய்யவேண்டும் என்றாய். அந்தப் பக்தியோகம் கைகூட பாபங்கள் தொலைய வேண்டும்.

பாபங்களுக்குப் பல பல பிராயச்சித்தங்கள் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ளன. இது நடக்கக்கூடிய காரியமா?அல்பமான ஆயுளை உடையவனால் பிராயச்சித்த சாஸ்திரங்களை அறியவும், அறிந்தபடி பிராயச்சித்தங்களை அநுஷ்டிக்கவும் எப்படி முடியும்?அவன் அசக்தனாயிற்றே. நானும் அப்படியேதானே இருக்கிறேன். அசக்தனான என்னால் உன்னை அடையவும் முடியாது. என்ன செய்வது என்று வருந்துகிறேன் என்றான்.

அர்ஜுன!பக்தியோக விரோதிகளான பிராயச்சித்தங்களாகிற பல தர்மங்களை அநுஷ்டிக்க முடியவில்லை என்று விட்டிருக்கிறாய் அல்லவா?பிராயசித்தங்களாகிற சுமையை என்னிடம் ஸமர்ப்பித்துவிடு. இதனால் ப்ரஸந்நனான நானே அவற்றின் ஸ்தானத்திலிருந்து உன்னை பக்தியோக விரோதிகளான பாபங்களிலிருந்தும் விடுவிக்கிறேன். ஆகவே வருந்த வேண்டாம். இதுதான் அங்கப்ப்ரபத்தி விஷயமான இந்தச் சரம ச்லோகத்தின் பொருள்.

அர்ஜுன!உனக்கு இதுவரை உபதேசித்தது பரம ரஹஸ்யம். தவத்தை அநுஷ்டிக்காதவனுக்கு இதைச் சொல்லாதே. தவத்தை அநுஷ்டிப்பவனாக இருந்தாலும் ஆசார்ய பக்தியும் பகவத் பக்தியும் இல்லாதவனுக்குச் சொல்லாதே. இவை இருந்தாலும் பணிவிடை செய்யுமளவுக்கு ச்ரத்தையும் கேட்பதில் ஆவலும் இல்லாதவனுக்குச் சொல்லாதே. என்னிடம் அஸூயை உள்ளவனுக்க்கு மட்டும் ஒருபோதும் சொல்லாதே.

நான் கூறிய பரம ரஹஸ்யத்தை என் பக்தர்களுக்கு உபதேசிப்பவன் என்னையே அடைவான். இது திண்ணம்.

நீ கீதையை நல்லவர்களுக்க் உபதேசிப்பவனைப் போல் மனிதர்களுக்குள் வேறு யாரும் எனக்கு மிகவும் இஷ்டமானதைச் செய்ததில்லை. இனிச் செய்யப் போவதுமில்லை. நம் இருவர் ஸம்பாஷணம் உயர்ந்த தர்மத்தை உலகுக்கு உணர்த்தக்கூடியது. மிகுந்த புண்ணியத்தையும் விளைவிக்கக் கூடியது. இதைச் சிறந்த ஆசார்யனிடமிருந்து க்ரஹிப்பவன் என்னை ஜ்ஞான யஜ்ஞத்தால் ஸந்தோஷிக்கச் செய்தவன் ஆவான்.

ச்ரத்தையுடன் அஸூயையின்றி இதைக் காதால் கேட்பவனும் பாவங்களிலிருந்து விடுபட்டு பாகவத ஸ்மூஹத்துடன் சேருவான். நல்ல ஸத்ஸங்கம் கிடைக்கப் பெறுவான். தனஞ்செய!உன்னுடைய விபரீத ஜ்ஞானம் மிகுதியின்றி ஒழிந்ததா? என்று கேட்டான் கண்ணன்.

அர்ஜுனன்—அச்யுத!உன்னுடைய அநுக்ரஹத்தால் எனக்குத் தெளிவு பிறந்து விட்டது. நான் யுத்தம் செய்யத் தயாராகிவிட்டேன் என்றான்.

இதுவரை கூறிவந்த ஸஞ்சயன் தன் வார்த்தையுடன் ஸ்ரீகீதாசாஸ்த்திரத்தைப் பூர்த்தி பண்ணுகிறான். அவர்களுடைய இந்த ஸம்பாஷணம் மிகவும் அத்புதமாகவும் மெய்சிலிர்ப்பை உண்டுபண்ணுவதாகவும் அமைந்திருந்தது. அதைக் கேட்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

ஜ்ஞானம் முதலான எல்லா நற்குணங்களுக்கும் இருப்பிடமான ஸ்ரீகிருஷ்ணன் கூறிய மிக ரஹஸ்யமான அர்த்தங்களை வ்யாஸரின் அநுகிரஹத்தால் ஏற்பட்ட திவ்யமான காதுகளைக் கொண்டு அர்ஜுனனைப் போல் நேரிடையாகவே கேட்டேன். பகவானுடைய முகாரவிந்தத்திலிருந்து பெருகிய தேனை ஸாக்ஷாத்தாகவே பருகும் பாக்கியம் கிட்டிற்று என்றபடி.

கேசவனும், அர்ஜுனனும் பேசிய பேச்சு மிகவும் அற்புதம். கேட்ட மாத்திரத்தில் சகல

பதினெட்டாம் அத்தியாயம்

பாவங்களையும் போக்கும். அர்ஜுனனுக்கு பகவான் காட்டிய விச்வரூபத்தை வ்யாஸரின் அநுக்கிரகத்தால் நானும் சேவித்தேன். அதி அத்புதமான உருவத்தை நினைத்து ஆனந்தம் அடைகிற நான் மிகவும் வியக்கிறேன்.

மகராஜனே! முடிவாக ஒன்று கூறுகிறேன்—எந்தப் பக்கத்தில் யோகேச்வரனை கிருஷ்ணன் விளங்குகிறானோ, எந்தப் பக்கத்தில் அர்ஜுனன் வில்லேந்தி நிற்கிறானோ அந்தப் பக்கத்தில்தான் நிலையான செல்வம், உறுதியான வெற்றி, சாச்வதமான திறமை நிலைநின்ற ந்யாயம் இவையனைத்தும் குடிகொண்டிருக்கும் என்பது சுத்தமான மனம் பெற்ற என்னுடைய உறுதியான நிச்சயம் என்றான் சஞ்சயன்

பதினெட்டாவது பரம ஸாரம் முற்றும்